



# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com


VOLUME : 01 ISSUE: 329 22.05.2026 FRIDAY VAIKASI : 8 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 329 22.05.2026 வெள்ளிக்கிழமை வைகாசி : 8 விலை : ரூ.5/-


## தமிழகத்தில் மலர்ந்தது கூட்டணி ஆட்சி; ஆண்டவன் மீது ஆணையிட்டு

# "23 பேர் அமைச்சர்களாக பதவியேற்பு!"

### மத்தியில் இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு பாஜ ஆட்சி: ஆக்சிஸ் மை இந்தியா நிறுவனர் கணிப்பு



புதுடில்லி: மே.22- பாஜவின் ஆட்சி செயல்திறன் மோசம் ஆகாத வரையில், மத்தியில் அக்கட்சியின் ஆட்சி தொடர்ந்து நீடிக்கும் என ஆக்சிஸ் மை இந்தியா நிறுவனர் கூறியுள்ளார்.

ஏராளமான தேர்தல் முடிவுகளை சரியாக கணித்த நிறுவனம் ஆக்சிஸ் மை இந்தியா. இந்த நிறுவனம் தமிழக சட்டசபை தேர்தல் முடிந்த நிலையில், முதல்வர் விஜய் தலைமையிலான விஜய் தவெக கட்சிக்கு 100க்கும் மேற்பட்ட இடங்களை பிடிக்கும் என சரியாக கணித்தது.

இந்த நிறுவனத்தின் உரிமையாளர் பிரதீப் குப்தா கூறியதாவது: மத்தியில் 2014ம் ஆண்டு துவங்கிய பாஜ ஆட்சி குறைந்தது 20 ஆண்டுகளாவது நீடிக்க வாய்ப்பு உள்ளது. பாஜவின் ஆட்சி செயல் திறன் குறையாத வரையில் மத்தியில் அக்கட்சியின் நிலை பாதுகாப்பாக இருக்கும்.

முன்பு 1977 ம் ஆண்டு காலகட்டத்தில் காங்கிரஸ் தொடர்ச்சியாக ஆட்சி செய்தது. அதன் பிறகு சிரமங்களை சந்திக்க துவங்கியது. அக்காலத்தில் சுமார் 20 ஆண்டுகள் நீடிக்கும் ஒரு அரசியல் தலைமுறையை பற்றி நாம் பேசுவது உண்டு. அந்த 20 ஆண்டு கால சுழற்சி இப்போதும் தொடரும். இதன் மூலம் பாஜவும், நீண்ட காலத்திற்கு இந்திய அரசியலின் மையத் தூணாக திகழும்.

மக்களின் மிகப்பெரிய உத்தரவை பெற்றுள்ள பாஜ மீதான எதிர்பார்ப்புகளும் அதிகரித்துள்ளன. எனவே பாஜவும், தேஜவும் இனி சிறப்பாக செயல்பட வேண்டும்.

அவர்களின் செயல்பாடு பலவீனமாகவோ அல்லது மோசமாகவோ மாறும் வரை பாஜ தொடர்ந்து வெற்றி பெறும். எதிரணி தொடர்ந்து தோல்வியடையும்.

15 ஆண்டுகளாக ஆட்சியில் இல்லாத காங்கிரஸ், மக்களை தங்களுக்கு ஆதரவாக மாற்ற குறைந்தது, இன்னும் ஐந்து ஆண்டுகளாவது ஆகலாம் என நான் கருதுகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

சென்னை: மே.22- முதலவர் விஜய் தலைமையிலான தமிழக அமைச்சரவை, இன்று (மே 21) விரிவாக்கம் செய்யப்பட்டது. 23 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுக்கொண்டனர்.

சட்டசபை தேர்தலில், த.வெ.க., 108 இடங்களில் வெற்றி பெற்றது. தி.மு.க., கூட்டணியில் இடம் பெற்றிருந்த காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளின் ஆதரவோடு, ஆட்சி அமைத்தது. கடந்த 10ம் தேதி, முதல்வர் விஜய் மற்றும் ஒன்பது அமைச்சர்கள் பதவியேற்றனர்.

இந்நிலையில், (மே 21) காலை 10:00 மணிக்கு, கவர்னர் மாளிகையில் புதிய அமைச்சர்கள் பதவியேற்பு விழா நடைபெற்றது. தமிழக கவர்னர் அர்லேக்கரை பூங்கொத்து கொடுத்து முதல்வர் விஜய் வரவேற்றார். 23 பேர் அமைச்சர்களாக பதவியேற்று கொண்டனர். அவர்களுக்கு தமிழக கவர்னர் அர்லேக்கர் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

காங்கிரஸ் சார்பில், ராஜேஷ்குமார், விஸ்வநாதன் ஆகியோர், அமைச்சர்கள் ஆகினர். தமிழக அமைச்சரவையில், 59 ஆண்டுகளுக்கு பின், காங்கிரஸ் மீண்டும் இடம்பெற்றது. கோவை வடக்கு எம்எல்ஏ சம்பத்குமார் மற்றும் கிணத்துக்கடவு எம்எல்ஏ விக்னேஷ் ஆகிய இருவர் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர். இதுவரை விஜயலட்சுமி (குமாரபாளையம்), கமலி (அவிநாசி), ஜெகதீஸ்வரி (ராஜபாளையம்), கீர்த்தனா (சிவகாசி) ஆகிய 4 பேர் இடம்பெற்றுள்ளனர்.

ஆண்டவன் மீது ஆணையிட்டு பதவியேற்ற அமைச்சர்கள் பெயர் பட்டியல்!



1. ஸ்ரீநாத் தூத்துக்குடி (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பிளஸ் 2

2. கமலி அவிநாசி (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: எம்.ஏ., ஆங்கில இலக்கியம்

3. விஜயலட்சுமி குமாரபாளையம் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பிளஸ் 2

4.ரஞ்சித்குமார்காஞ்சிபுரம் (ஆண்டவன் மீது)
பி.ஏ., (திறந்தநிலை பல்கலை)

5.வினோத் கும்பகோணம் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.இ., (இடைநிற்றல்)

6. ராஜீவ் திருவாடானை (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: எம்.பி.பி.எஸ்.,

7.ராஜ்குமார் கடலூர் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: டிப்ளமோ (மெக்கானிக்கல் இன்ஜி.,)

8.காந்திராஜ் அரக்கோணம் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பிஏ., (இடைநிற்றல்) ஐடிஐ (எலட்ரீசியன்)

9.மதன் ராஜா ஒட்டப்பிடாரம் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.இ.,

10.ஜெகதீஸ்வரி ராஜபாளையம் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.எஸ்சி.,

11.ராஜேஷ்குமார் கிள்ளியூர் (ஆண்டவன் மீது)
''பெருந்தலைவர் காமராஜர் நாமம் வாழ்க, ராஜிவ்காந்தி நாமம் வாழ்க, ராகுல் காந்தி நாமம் வாழ்க'' என்று கூறி கிள்ளியூர் காங்கிரஸ் எம்எல்ஏ ராஜேஷ்குமார் அமைச்சராக பதவியேற்றுக்கொண்டார்.
கல்வித்தகுதி: பி.எல்., (பெங்களூரு பல்கலை) எம்.ஏ., (விநாயகா மிஷன் பல்கலை)

12.விஜய் பாலாஜி ஈரோடு கிழக்கு (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.காம்., (சி.எஸ்.,)

13.லோகேஷ் தமிழ்செல்வன் ராசிபுரம் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.காம்., (லயோலா கல்லூரி) எம்.பி.ஏ.,

14.விஜய் தமிழன் பார்த்திபன் சேலம் தெற்கு (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பிளஸ் 2

15.ரமேஷ் ஸ்ரீரங்கம் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.இ.,

16.விஸ்வநாதன் மேலூர் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.ஏ., (சென்னை பல்கலை)

17.குமார் வேளச்சேரி (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.இ., (சிவில்)

18.தென்னரசுஸ்ரீபெரும்புதூர் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: 10ம் வகுப்பு (தேர்ச்சி பெறவில்லை)

19.சம்பத் குமார் கோவை வடக்கு (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: எம்பிஏ (தொலைதூர பட்டப்படிப்பு, அண்ணாமலை பல்கலை)

20.முகமது பர்வேஸ் அறந்தாங்கி (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.ஏ., எல்எல்பி (ஹானர்ஸ்)

21.சரத்குமார் தாம்பரம் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.பி.ஏ.,

22.மரிய வில்சன் ஆர்கே நகர் (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.டெக்., எம்.பி.ஏ.,

23.விக்னேஷ் கிணத்துக்கடவு (ஆண்டவன் மீது)
கல்வித்தகுதி: பி.எஸ்சி., கம்ப்யூட்டர் சயின்ஸ்

ஒருவர் மட்டும்!

இன்று பதவியேற்ற 23 அமைச்சர்கள், ஏற்கனவே பதவியேற்ற முதல்வர் உள்ளிட்ட 10 பேரில், ஆதவ் ஒருவர் மட்டுமே உளமாற உறுதி கூறி பதவியேற்றவர்; மற்ற அனைவரும் ஆண்டவன் மீது உறுதி கூறி பதவியேற்றுள்ளனர்.

குழு புகைப்படம்

தமிழக கவர்னர் அர்லேக்கர் மற்றும் முதல்வர் விஜய்யுடன் புதிய அமைச்சர்கள் குழு புகைப்படம் எடுத்து கொண்டனர்.

மாவட்ட வாரியாக அமைச்சர்கள் எண்ணிக்கை:

* சென்னை7
* நாமக்கல் 3
* கோவை2
* காஞ்சிபுரம்2
* மதுரை2
* ஈரோடு2
* விருதுநகர்2
* தூத்துக்குடி2
* ராமநாதபுரம்1
* திருப்பூர்1
* செங்கல்பட்டு1
* ராணிப்பேட்டை1
* சிவகங்கை1
* கன்னியாகுமரி1
* திருச்சி1
* கடலூர்1
* தஞ்சாவூர்1
* புதுக்கோட்டை1
* சேலம்1

### அரசு மருத்துவமனையில் தவெக பிரமுகர்கள் ஆய்வால் சர்ச்சை



தென்காசி, மே.22- சங்கரன்கோவில் அரசு மருத்துவமனை மற்றும் கடையநல்லூர் அம்மா உணவகத்தில் தவெக நிர்வாகிகள் ஆய்வு செய்தது விமர்சனத்தை ஏற்படுத்தியுள்ளது.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே கல்குவாரியில் வேலை பார்த்த ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த தொழிலாளி ஒருவர் இயந்திரத்தில் சிக்கியதில் அவரது கை துண்டானது. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டார்.

பின்னர், மேல் சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், மருத்துவர் போல் வெள்ளை கோட் அணிந்துகொண்டு வந்த தவெக மருத்துவ அணி பெண் பிரமுகர் மற்றும் நிர்வாகிகள் சிலர், சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு சென்று இந்த சம்பவம் தொடர்பாக மருத்துவர்களிடம் கேட்டறிந்துள்ளனர்.

மேலும் அவர்கள், பணியில் இருந்த மருத்துவர்களிடம் மருத்துவமனையில் உள்ள வசதிகள், தேவைப்படும் வசதிகள், பணியாளர்கள் விவரங்கள் உள்ளிட்டவை குறித்து கேட்டறிந்துள்ளனர்.

இதேபோல், கடையநல்லூரில் உள்ள அம்மா உணவகத்தை தவெக நிர்வாகிகள் பார்வையிட்டு, அம்மா உணவகத்தில் உள் கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள், குடிநீர் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்துள்ளனர்.

இந்நிலையில், மக்கள் பிரதிநிதிகளாக இல்லாத கட்சி நிர்வாகிகள் அரசு மருத்துவமனை, அம்மா உணவகத்தில் ஆய்வு செய்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. அரசு மருத்துவமனை, அம்மா உணவகத்தை கட்சி நிர்வாகிகள் ஆய்வு செய்ய அதிகாரம் அளித்தது யார்? இந்த ஆய்வுக்கு அதிகாரிகள் ஒத்துழைப்பு அளித்தது ஏன்? என்று சமூக வலைதளங்களில் பலரும் விமர்சித்து வருகின்றனர்.

ஆய்வுக்கு சென்றவர்கள் மற்றும் அவர்களை ஆய்வு செய்ய அனுமதித்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

### "ஐயூஎம்எல் சார்பில் ஏ.எம்.ஷாஜகானை அமைச்சரவையில் சேர்க்க முடிவு" : காதர் மொகிதீன்




சென்னை: மே.22- தவெக தலைமையிலான அமைச்சரவையில் ஐயூஎம்எல் இடம் பெறும் என்றும், பாபநாசம் தொகுதி எம்எல்ஏ ஏ.எம். ஷாஜகானை அமைச்சராக சேர்க்க பரிந்துரைத்துள்ளோம் என்றும் அக்கட்சியின் தலைவர் காதர் மொகிதீன் தெரிவித்துள்ளார்.

தவெக தலைமையிலான அரசுக்கு, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயுஎம்எல்)ன் இரண்டு எம்எல்ஏக்கள் ஆதரவு அளித்திருந்தனர். இதையடுத்து, அமைச்சரவையில் ஐயூஎம்எல் இடம்பெற வேண்டும் என்றும், இரண்டு எம்எல்ஏக்களில் ஒருவரை அமைச்சராக்க விரும்புவதாகவும், அந்த ஒருவரை தெரியப்படுத்துமாறும் விஜய் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, இது தொடர்பாக ஆலோசிக்க ஐயூஎம்எல் மாநில நிர்வாகிகளின் அவசரக் கூட்டம் கட்சியின் தேசிய தலைவர் கே.எம். காதர் மொகிதீன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய காதர் மொகிதீன், "இன்றைய கூட்டத்தில் மூன்று முக்கிய செய்திகள் பரிமாறப்பட்டன. தமிழகத்தில் தவெக ஆட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஐயூஎம்எல்ன் இரண்டு உறுப்பினர்கள் நிபந்தனையற்ற ஆதரவை தெரிவித்தனர். தற்போது ஆட்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆதரவு கொடுத்த நேரத்தில் எந்த நிபந்தனையையும் நாங்கள் வைக்கவில்லை; எந்தக் கோரிக்கையையும் தெரிவிக்கவில்லை.

இருந்தாலும் முதல்வர் ஜோசப் விஜய், பெருந்தன்மையோடு ஐயூஎம்எல்ஐ அமைச்சரவையில் சேர்த்துக்கொள்ள முடிவெடுத்திருப்பதாகவும், உங்கள் இரண்டு எம்எல்ஏக்களில் ஒருவரை அமைச்சரவையில் சேர்க்க முடிவெடுத்திருப்பதாகவும், அதற்கு உங்கள் ஒப்புதல் வேண்டும் என்றும் என்னிடம் கேட்டார்.

இது எங்களுக்கு எதிர்பாராத ஒரு செய்தி. நாங்கள் கேட்கவும் இல்லை, கோரிக்கையும் வைக்கவில்லை. இருந்தபோதும், எங்கள் கட்சியை அமைச்சரவையில் சேர்க்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பெருந்தன்மையோடு எங்களை அணுகியதற்காக நாங்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

இதுபற்றி நாங்கள் கலந்து பேசினோம். எங்கள் கட்சியின் அரசியல் ஆலோசனைக் குழுவின் தலைவராக இருப்பவர் கேரளத்தின் தலைவர் சயது சாதிக் அலி ஷியாப்தங்கள். அவர், நபிகள் நாயகத்தின் 38வது வாரிசு. அவரும், கேரள அமைச்சரும் கட்சியின் தேசிய பொதுச் செயலாளருமான குஞ் சாலிகுட்டியும் சேர்ந்து இது தொடர்பான கட்சியின் முடிவை நேற்று அறிவித்தார்கள். அது தொடர்பாக நாங்களும் ஆலோசனை மேற்கொண்டோம். இதில், தவெக தலைமையிலான தமிழக அரசில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கும் இடம்பெறுவது ஆதரிப்பது என முடிவெடுத்துள்ளோம்.

இன்றைய கூட்டத்தில், ஐயூஎம்எல்ன் இரண்டு எம்எல்ஏக்களுக்கும் அமைச்சரவையில் ஏன் இடம் கேட்கக் கூடாது என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது. இதற்கு, முதலில் ஒருவரை அமைச்சரவையில் சேர்ப்போம். அதன் பிறகு இரண்டாவது எம்எல்ஏவை அமைச்சரவையில் சேர்ப்பது குறித்து கேட்போம் என முடிவெடுக்கப்பட்டுள்ளது. இருவரில் யாரை அமைச்சரவையில் இடம்பெறச் செய்வது என்பது குறித்த முடிவை எடுக்கும் அதிகாரம் எனக்கு (காதர் மொகிதீன்) வழங்கப்பட்டது. அதன்படி, பாபநாசம் தொகுதி எம்எல்ஏ ஏ.எம்.ஷாஜகானை அமைச்சரவையில் சேர்க்க முடிவெடுத்திருக்கிறோம். கூட்டணி குறித்து தேர்தல் காலத்தில் முடிவு செய்வோம்" என தெரிவித்தார்.


விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000



# மதுரை த.வெ.க மாவட்ட அலுவலகத்தில் பூங்கொத்து கொடுத்து இணைந்த பெண் தொழிலதிபர்

அலங்காநல்லூர் மே 22-

மதுரை மாவட்டத்தில் தமிழக வெற்றி கழகத்தின் (த.வெ.க) மக்கள் செல்வாக்கு நாளுக்கு நாள் அசுர வேகத்தில் அதிகரித்து வரும் நிலையில், அலங்காநல்லூர் அருகே உள்ள கல்லணை கிராமத்தைச் சேர்ந்த பிரபல பெண் தொழிலதிபர் லெட்சுமி, த.வெ.கவில் அதிகாரப்பூர்வமாகத் தன்னை இணைத்துக் கொண்டார்.தொழிலதிபர் லெட்சுமி, தனது முக்கிய ஆதரவாளர்களுடன் மதுரை பகுதியில் அமைந்துள்ள த.வெ.க மாவட்டக் கழக அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்தார். அங்கு, மாவட்டச் செயலாளர்கள் விஜய்அன்பன் கல்லானை, விஷால்கிருஷ்ணா ஆகியோர் தலைமையிலும், அலங்காநல்லூர் ஒன்றியச் செயலாளர் விஜய்ஹரிஷ், நகரச் செயலாளர் தளபதி ரஞ்சித் ஆகியோர் முன்னிலையிலும் த.வெ.கவில் இணைந்தார். முன்னதாக, அவர் மாவட்டச் செயலாளர்களுக்குப் பூங்கொத்து வழங்கி வாழ்த்துகளைப் பெற்றுக் கொண்டார்.கட்சியில் இணைந்த தொழிலதிபர் லெட்சுமி அவர்களுக்கு, த.வெ.க மாவட்டச் செயலாளர்கள் விஜய்அன்பன் கல்லானை மற்றும் விஷால்கிருஷ்ணா ஆகியோர் பாரம்பரியக் கைத்தறி ஆடை அணிவித்து, நெஞ்சாரக் கட்சிக்குள் வரவேற்றனர். இந்நிகழ்வில் த.வெ.க மாவட்ட, ஒன்றிய, நகர, கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியைச் சேர்ந்த முக்கியப் பொறுப்பாளர்கள் பலர் பெருந்திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# ராஜீவ் காந்தியின் 35வது நினைவு தினம்! பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி! திருமுருகன்பூண்டி, பெரியாயிபாளையத்தில் திரண்ட காங்கிரஸ் நிர்வாகிகள்

திருப்பூர் மே 22-

இந்தியத் திருநாட்டின் முன்னாள் பாரத பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களின் 35ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, திருப்பூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில், திருமுருகன்பூண்டி மற்றும் பெரியாயிபாளையம் பகுதிகளில் மாபெரும் நினைவஞ்சலி மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்வுகள் நடைபெற்றன.

*சிலைகளுக்கு மாலை அணிவிப்பு - அஞ்சலி:*



திருப்பூர் வடக்கு மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் செல்வகுமார் தலைமையில், திருமுருகன்பூண்டியில் அமைந்துள்ள ராஜீவ் காந்தி திருவுருவச் சிலை மற்றும் பெரியாயிபாளையம் ரோட்டில் அமைந்துள்ள ராஜீவ் காந்தி சிலை ஆகியவற்றுக்கு மாவட்ட காங்கிரஸ் சார்பில் மாலை அணிவித்து, மலர் அஞ்சலி செலுத்தி வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

*உறுதிமொழி ஏற்பு மற்றும் பங்கேற்றோர்:*

நினைவஞ்சலி கூட்டத்தைத் தொடர்ந்து, நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டினை காத்திடவும், பயங்கரவாதத்தை ஒழிக்கவும் நிர்வாகிகள் அனைவரும் திரண்டு "பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழி" ஏற்றுக் கொண்டனர். இம்மாபெரும் நினைவஞ்சலி கூட்டத்திற்குத் திருமுருகன்பூண்டி நகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஏ.அசோக் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். இந்நிகழ்வில் அவிநாசி தெற்கு வட்டாரத் தலைவர் கொங்கு தங்கமுத்து வடக்கு லட்சுமண சாமி நகர தலைவர் கோபால்சாமி, நிர்வாகிகள் புண்ணியமூர்த்தி, ஈஸ்வரமூர்த்தி, வேலுச்சாமி, செல்வராஜ் கணேசன், அறிவழகன், பாப்பண்ணன், புவனேஸ் வரி, அன்னூர் நகர காங்கிரஸ் மோகன்ராஜ், பரமேஸ்வரன், செல்வம், மனோகர், கொக்குமடை மோகன், காங்கிரஸ் இளைஞர் அணி விக்னேஷ், தட்சிணாமூர்த்தி, தண்டபாணி, மங்கேஸ்வரன், அருள், லட்சுமி, மாதேஷ் குமார், கிருஷ்ணன், அவிநாசி அப்பன், வேலுச்சாமி மற்றும் கட்சியின் முக்கிய மாவட்ட, வட்டார, நகர நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் திரளாகக் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# சரக்கு கட்டணங்கள் 4% உயர்வு டீசல் விலை உயர்வால் முடிவு

புதுடெல்லி:மே,22-

டீசல் விலை உயர்வு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மே 20 முதல் அமலுக்கு வரும் வகையில் சரக்குக் கட்டணங்களை உயர்த்த போக்குவரத்துத் துறை சங்கத்தினர் முடிவு செய்துள்ளனர். இந்த நடவடிக்கையால் விலைவாசி மேலும் உயரும் என நிலை ஏற்பட்டுள்ளது.இந்த சரக்கு கட்டண உயர்வு அகில இந்திய போக்குவரத்துத் துறையினர் நலச் சங்கம் (AITWA) சார்பில் வியாழக்கிழமையன்று (மே 21) அறிவிக்கப்பட்டன.

'இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக டீசல் விலை நிலையாகவே இருந்து வந்தன. இதனால் சரக்குக் கட்டணங்களை பெரிய அளவில் உயர்த்தவில்லை. தற்போது அமலுக்கு வந்த டீசல் விலையின் கடும் உயர்வு காரணமாக கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளது' என அந்த சங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



டீசல் விலை உயர்வைச் சமாளிக்கும் வகையில், போக்குவரத்துத் துறையினர் 'எரிபொருள் சரிசெய்தல் காரணி' (FAF) எனப்படும் ஒரு புதிய கணக்கீட்டு முறையை அறிமுகப்படுத்தியுள்ளனர். போக்குவரத்து துறையின் செலவுகளில் 65% பங்கினை டீசலின் விலை நிர்ணயிக்கிறது. எனவே டீசல் விலைக்கான செலவை ஈடுகட்டும் வகையில், சரக்கு கட்டணங்களை உயர்த்த இந்த கணக்கீட்டு முறை உதவும் என போக்குவரத்து துறையினர் தெரிவிக்கின்றனர்.மேலும், போக்குவரத்துத் துறையினர் தங்கள் வங்கிக் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கு உதவும் வகையில், இந்த புதிய வழிமுறையை ஏற்றுக்கொண்டு கூடுதல் கட்டணத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வாடிக்கையாளர்களுக்கு அகில இந்திய போக்குவரத்துத் துறையினர் நலச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.அதேபோல, பல இடங்களில் டீசல் பற்றாக்குறையால் லாரிகள் ஆங்காங்கே சிக்கிக்கொள்வதால், சரக்குகள் வந்து சேர்வதில் ஏற்படும் தாமதத்துக்கு எவ்வித அபராதமும் விதிக்க வேண்டாம் என்றும் போக்குவரத்து துறையினர் வாடிக்கையாளர்களை கேட்டுக்கொண்டுள்ளனர். சரக்கு கட்டணம் 4% உயர்த்தப்படுவதால், நாடு முழுவதும் பல்வேறு பொருட்களின் விலைவாசி உயரும் நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே பெட்ரோல், டீசல் மற்றும் சிலிண்டர் விலை உயர்வால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், சரக்கு கட்டண உயர்வால் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வையும் எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

# ஊடகங்களிடம் தகவல்களைப் பகிர அதிகாரிகளுக்கு மேற்கு வங்க அரசு தடை

கொல்கத்தா:மே 22-

அரசு அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் ஊடகங்களிடம் பேச அம்மாநில பாஜக அரசு உத்தரவிட்டுள்ளது.



அகில இந்தியப் பணி, மேற்கு வங்க குடிமைப் பணி, மேற்கு வங்க காவல் துறைப் பணி, மேற்கு வங்க அரசுப் பணி ஊழியர்களால் தகவல்களைப் பரப்புதல் என்ற தலைப்பில் முதல்வர் சுவேந்து அதிகாரி தலைமையிலான அரசு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.அதில், 'எந்தவொரு அரசு உத்தரவும் இல்லாமல், மேற்கண்ட பணிப் பிரிவுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் பத்திரிகையாளர்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆவணங்கள் அல்லது தகவல்களைப் பரிமாறிக்கொள்வதற்கு முழுமையாக தடை விதிக்கப்படுகிறது.மேலும், செய்தித்தாள்களில் எழுதுவது, தொலைக்காட்சி அல்லது வானொலி விவாதங்களில் பங்கேற்பது, அரசு குறித்தோ அல்லது அதன் கொள்கைகள் குறித்தோ விமர்சனக் கருத்துகளைத் தெரிவிப்பது ஆகியவற்றுக்கு தடை விதிக்கப்படுகிறது. மத்திய அரசுடனோ அல்லது பிற மாநிலங்களுடனோ உள்ள உறவுகளைப் பாதிக்கக்கூடிய கருத்துகளையோ அல்லது தகவல்களையோ வெளியிடுவதை தவிர்க்க வேண்டும்' என்று அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தமிழக அரசு ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்தே முதலில் பாட வேண்டும்" வைகோ

சென்னை:மே,22-

"தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சியில் வந்தே மாதரத்திற்கு இடம் கொடுக்காமல், தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும், பிறகு தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்தி வருகிறோம், மேலும், மும்மொழிக் கொள்கையை எக்காரணம் கொண்டும் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது." என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் செய்தியாளர்களிடத்தில் பேசும்போது, "மும்மொழிக் கொள்கையை எக்காரணம் கொண்டும் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆளுநரால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் வந்தே மாதரத்தை கொண்டு வந்து அவர் திணிக்கிறார். தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சியில் வந்தே மாதரத்திற்கு இடம் கொடுக்காமல், தமிழ்த்தாய் வாழ்த்து முதலில் பாடப்பட வேண்டும், பிறகு தேசிய கீதம் பாடப்பட வேண்டும் என்பதைத்தான் நாங்கள் வலியுறுத்தி கூறி வருகிறோம். தவெக ஆட்சிக்கு ஆறு மாத காலம் அவகாசம் கொடுப்போம். அவர்கள் அனுபவம் இல்லாதவர்கள். அவர்களும் போகப்போக படிப்பிணைகளை கற்றுக் கொள்வார்கள். திமுக தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. காங்கிரஸ் பிரிந்து சென்றதால் திமுகவுக்கு எந்த பின்னடைவும் கிடையாது. காங்கிரஸ் இருக்கும் இடத்தில்தான் மதச்சார்பின்மை காக்கப்படுகிறது எனச் சொல்ல முடியாது.மம்தா பானர்ஜி உள்ளிட்ட பல கட்சியைச் சார்ந்தவர்கள் மதச்சார்பின்மையை காத்து வருகின்றனர். இன்ஸ்டாகிராம் மூலம் தவெக ஆட்சியைப் பிடித்து விட்டதாக திமுக தலைவர் ஸ்டாலின் கூறுவது, அவர் மனதில் இருந்து சொல்வது. அதே கருத்தை யாரெல்லாம் சொல்கிறார்களோ அவரவர் விருப்பத்திற்கு சொல்லலாம். அந்த கருத்துக்கு நான் ரியாக்ஷன் கொடுக்க விரும்பவில்லை. நாங்கள். கடந்த ஆறு மாத காலமாக எங்களது இணையத்தை வலுப்படுத்தி இருக்கிறோம். அதிமுக அரசமைக்குமா, திமுக ஆதரவு கொடுக்குமா என்ற குழப்பம் பல நாட்களாக நீடித்து வருகிறது. இது குறித்து பரவலாக பேசப்படுகிறது. இது குறித்து நான் எந்தக் கருத்தும் சொல்ல விரும்ப வில்லை.மத்திய அரசின் ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் ஒரே அரசு, என்கிற போக்கு தமிழகத்துக்குள் பிரவேசிக்க முடியாமல் அவர்கள் படுதோல்வியை சந்தித்துள்ளது. கேரளாவிலும் அவர்களால் சாதிக்க முடியவில்லை. வருகிற நாட்களிலும் பாஜகவின் அஜெண்டாவை நிறைவேற்றுவதற்கு நாங்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவிப்போம்" என்றார்.

# சென்னை பெருநகர காவல் ஆணையராக அமல்ராஜ் ஐபிஎஸ் நியமனம்

சென்னை:மே 22-

சென்னை பெருநகர காவல் ஆணையராக அமல்ராஜ் ஐபிஎஸ்ஸை நியமித்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.தவெக அரசு பொறுப்பேற்றது முதல் பல்வேறு ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்.இந்தச் சூழலில், இன்று தமிழக அரசு வெளியிட்ட உத்தரவில், சென்னை பெருநகர



காவல் ஆணையராக இருந்த அபின் தினேஷ் மோடக் மாற்றப்பட்டு, புதிய ஆணையராக அமல்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.அதேபோல, சென்னை பெருநகர ஆணையராக இருந்த அபின் தினேஷ் மோடக், சிபிசிஐடி ஏடிஜிபியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, சட்டப்பேரவைத் தேர்தல் நேரத்தில் சென்னை பெருநகர ஆணையராக இருந்த அருண் ஐபிஎஸ் மாற்றப்பட்டு, அபின் தினேஷ் மொடக் தேர்தல் ஆணையத்தால் புதிய ஆணையராக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# "தமிழ்த்தாய் வாழ்த்து அவமதிப்பை தவெக அரசு கண்டும் காணாமல் அமைதி காப்பது ஏன்?" கனிமொழி

சென்னை:மே,22-

'தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முன்னுரிமை அளிக்காமல் அவமதிக்கப்பட்டதை, தவெக அரசு கண்டும் காணாமல் அமைதி காப்பது எதனால்?' என திமுக மகளிரணி செயலாளரும், எம்.பி.யுமான கனிமொழி கேள்வியெழுப்பியுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'இரண்டாவது முறையாக தவெக அரசின் அமைச்சரவை பதவியேற்பு விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை அவமதிக்கும் வகையில் மூன்றாவதாகப் பாடப்பட்டிருக்கும் செயல் கடும் கண்டனத்துக்குரியது.சென்ற முறை இதேபோல், தமிழ்த்தாய் வாழ்த்துக்கு முன்னுரிமை அளிக்காமல் அவமதிக்கப்பட்டபோது, 'இனி அவ்வாறு நடக்காது' என்று கூறிய தவெக அரசு, தற்போது கண்டும் காணாமல் அமைதி காப்பது எதனால்?' எனத் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வராக விஜய் பதவியேற்ற விழாவில், வந்தே மாதரம் முதலாவதாகவும், தேசிய கீதம் இரண்டாவதாகவும், தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாகவும் பாடப்பட்டது. இந்த விவகாரம் தமிழகத்தில் பெரும் சலசலப்பை உருவாக்கியது. அப்போது இதுபற்றி பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, இனிமேல் இதுபோல நடக்காது என்று விளக்கமளித்தார்.இந்தச் சூழலில், இன்று 23 தமிழக அமைச்சர்கள் பதவியேற்ற விழாவிலும், அதேபோல மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது சலசலப்பை உருவாக்கியுள்ளது

# "பிரதமர் மோடியின் 5 நாடுகள் பயணத்தில் 57 முக்கிய முடிவுகள்..." பியூஷ் கோயல் விவரிப்பு

புதுடெல்லி:மே 22-

பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட ஐந்து நாடுகள் பயணத்தின்போது 57 முக்கிய முடிவுகள் எட்டப்பட்டதாகவும், இவை இந்தியாவின் எதிர்காலத்துக்கு பெரும் பயன்களைத் தரக்கூடியவை என்றும் மத்திய அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.



பிரதமர் நரேந்திர மோடி சமீபத்தில், ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி ஆகிய 5 நாடுகளுக்கு 5 நாள் பயணம் மேற்கொண்டார். இந்த பயணம் தொடர்பாக டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல், "பிரதமரின் ஐந்து நாடுகளை உள்ளடக்கிய பயணத்தின்போது, இந்தியா அனைவரின் கவனமையமாக திகழ்ந்தது. பிரதமர் மோடிக்கு ஐந்து நாடுகளிலும் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மக்கள் அவரை பெருமைப்படுத்தினர். இந்தியாவும், பிரதமர் மோடியும் மூன்று சர்வதேச கவுரவங்களைப் பெற்றனர்.ஐந்து நாட்களில் மேற்கொள்ளப்பட்ட ஐந்து நாடுகள் பயணத்தின் மூலம், இன்றைய நிலையில் இந்தியா உலக அரங்கில் உறுதியாக நிலைத்து நிற்கிறது என்ற தெளிவான செய்தி உலக்கு உணர்த்தப்பட்டுள்ளது. உலகம் மிகுந்த மரியாதையுடனும் நம்பிக்கையுடனும் இந்தியாவை நோக்குகிறது. பிரதமர் மோடியின் தலைமையை இந்திய மக்கள் ஏற்கெனவே ஏற்றுக்கொண்டுள்ளனர். இன்று, ஒட்டுமொத்த உலகமும் அவரது தலைமைத்துவத்தை மரியாதை, நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புகளுடன் உற்று நோக்குகிறது.

இது வெறும் சர்வதேச ராஜதந்திர, அரசியல் பயணம் மட்டுமல்ல. இது இந்தியாவின் எதிர்காலத்துக்குப் பெரும் பயன்களை ஈட்டித் தந்துள்ளது. இந்த பயணத்தின் மூலம் எட்டப்பட்ட 57 முக்கிய முடிவுகள், வரும் ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சி, உத்திகள், பொருளாதாரப் பயணம், திறன்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள், தற்சார்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியவற்றை வடிவமைக்க இருக்கின்றன.ஐந்து நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஐந்து நாள் பயணம் நமது ஏற்றுமதியாளர்களுக்கு பெரும் வாய்ப்பு களை உருவாக்கவும், இந்தியாவில் பெருமளவிலான முதலீடுகளை ஈர்க்கவும் ஒரு உந்து சக்தியாக அமையும். ஐரோப்பாவும் இந்தியாவும் ஒன்றுக்கொன்று துணையாக நின்று பயனடையும் நட்பு நாடுகளைப் போன்றவை. நமக்கு இடையே போட்டி குறைவு. கூட்டாண்மைதான் அதிகம். இந்த நாடுகள் இந்தியாவை ஒரு நிலையான, நம்பகமான சக்தியாகவே நோக்குகின்றன" என தெரிவித்துள்ளார்.

# பெட்ரோல், டீசல், விலை உயர்வை கண்டித்து விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆர்ப்பாட்டம்

சென்னை:மே,22-

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலையை உயர்த்தியதை கண்டித்து, விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் சென்னையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்து விசிக மற்றும் இடதுசாரிகள் கட்சிகள் நேற்று வள்ளலார் நகர் பேருந்து நிலையம் அருகே கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.இதில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பெ.சண்முகம், மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்




கட்சி மாநில செயலாளர் பழ.ஆசைத்தம்பி, விசிக பொதுச்செயலாளர் ரவிக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.போக்குவரத்து, அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வுக்கு காரணமான பெட்ரோல், டீசல் விலை உயர்வை கைவிட வேண்டும். உணவகங்கள், சிறு தொழில்கள் மூட காரணமான வணிக சிலிண்டர் விலை உயர்வை கைவிட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தினர்.ஆர்ப்பாட்டத்துக்கு பின்னர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் செய்தியாளர்களிடம் கூறுகையில், "5 நாட்கள் முன் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்பட்டது.நான்கு நாட்களுக்கு பிறகு விலை மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. ஏற்கெனவே, வணிக சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோல் சென்று கொண்டிருந்தால் அடுத்த சில நாட்களில் வீட்டு உபயோக சிலிண்டர் விலையும் கடுமையாக உயர்த்தப்படும். வாழ முடியாத நெருக்கடிக்கு மக்களை பாஜக அரசு தள்ளி உள்ளது.பெட்ரோல், டீசல், எரிவாயு என்பது அத்தியாவசியமான பொருள். இதை அனைத்து மக்களுக்கும் குறைவான விலையிலும், தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கவும் பாஜக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார்.இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வீரபாண்டியன் தனது உரையில், ''பெட்ரோல், டீசல் எரிவாயு விலை உயர்வுக்கு முழுக்க முழுக்க மத்திய அரசும், பிரதமரும்தான் பொறுப்பு. இந்த நெருக்கடிக்கு மூல காரணம் அமெரிக்காவும், இஸ்ரேலும்தான்.நம் நட்பு நாடு ஈரான் தங்கு தடை இல்லாமல் எரிவாயு கொடுத்து கொண்டிருந்தார்கள். அதன் அதிபரை கொன்று விட்டார்கள். செல்வந்தர்கள் தான் தேசவளங்களை கொள்ளை அடிக்கிறார்கள். பிரதமரின் அறிவுரை வேண்டுகோள் எல்லாம் அந்த பக்கம் திரும்ப வேண்டும். உழைக்கிற மக்கள் பக்கம் அல்ல'' என்று கூறினர்.

# "தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை" அமைச்சர் நிர்மல் குமார்




சென்னை:மே,22-

"தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை. தவறான தகவல் பரப்பப்பட்டு வருகிறது. மின் வாரியத்தில் ஊழியர் பற்றாக்குறை உள்ளது" என மின்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "மின்துறையில் சீரமைக்க வேண்டிய பணிகள் நிறைய உள்ளன. சோலார் பேனல் கொள்முதல் விவகாரத்தில் விதிமுறை மீறல் நடந்துள்ளது. தவறு செய்தவர்கள் முன்னாள் அமைச்சர்களாக இருந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும். மின்தடை குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டாலும் நடவடிக்கை மேற்கொள்ள பணிகள் நடந்து வருகிறது.டிஎன்பிஎஸ்சி பணி நியமனத்தில் எந்த வித முறைகேடும் நடக்காது. மின்சாரத் துறை இரண்டரை லட்சம் கோடி ரூபாய் கடனில் உள்ளது. அதுமட்டு மல்லாமல் ஊழியர்கள் பற்றாக்குறையும் உள்ளது. இதற்கு முன்னர் இந்த யார் துறையை நிர்வகித்தார்கள் எனத் தெரியும்.கடந்த ஓராண்டாக, மற்ற ஒப்பந்தப் பணிகளுக்காக தோண்டப்படும் குழிகளில் 160 இடங்களில் பவர் கேபிள்கள் வெட்டப்பட்டுள்ளன. முதலில் நிர்வாகத்தை சீரமைக்க வேண்டும். டெண்டர் எடுப்பதில் இனி எந்த மறைமுக டீலிங்கும் நடைபெறாது. மின்சார விநியோகத்தை சீராக செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மக்கள் அளிக்கும் புகார்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப் பட்டுள்ளது. தமிழகத்தில் மின்கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் இல்லை. தவறான தகவல் பரப்பப்பட்டு வருகிறது" என்று அவர் தெரிவித்தார்.

# "புற வாசல் வழியாக தமிழக அமைச்சரவையில் கங்கிரஸ்" தமிழிசை கருத்து



கோவை:மே 22-

"புற வாசல் வழியாக தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் இடம்பெற்றுள்ளது. பல மாநிலங்களில் புறக்கணிக்கப்பட்ட கட்சிதான் காங்கிரஸ்" என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் கருத்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "எந்த தீய சக்தியை எதிர்த்து போராடுவோம் எனச் சொன்னார்களோ, அந்த தீய சக்தியின் ஒரு பகுதியாக இருந்தவர்களோடு இணைந்து ஆட்சி அமைத்திருக்கிறார்கள்.

புற வாசல் வழியாக அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளது காங்கிரஸ். பல மாநிலங்களில் புறக்கணிக்கப்பட்ட கட்சி காங்கிரஸ். ஊழல் அதிகமாக செய்த கட்சி, மாற்றங்களை கொண்டு வருவோம் என சொன்ன தவெக இனி எப்படி இதை செய்யப்போகிறார்கள் என்பதை நாம் உற்று நோக்க வேண்டும். காங்கிரஸின் அழுத்தத்துக்கு அவர்கள் இடம் கொடுக்கக் கூடாது. அமைச்சரவையில் உள்ளவர்களை விஜய் சரியாக வழிநடத்த வேண்டும்பிஎம்ஸ்ரீ, புதிய கல்விக் கொள்கை இவையெல்லாம் நல்ல திட்டம். திமுக ஆட்சி அதை வேண்டா வெறுப்பாக அணுகியதால்தான் மக்கள் இம்முறை அவர்களை புறக்கணித்திருக்கிறார்கள். வந்தே மாதரம் பாடல் நமது நாட்டு உணர்வை தட்டி எழுப்பிய பாடல். இதை இளைஞர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என உள்துறை அமைச்சகம் அனைத்து மாநிலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. மத்திய அரசின் வழிமுறையை பின்பற்றிதான் ஆக வேண்டும். பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணத்துக்கு பின்னால் தேச நலன் இருக்கிறது. ராகுல் காந்தியும் தான் சுற்றுப் பயணம் செல்கிறார். பிரதமரின் ஒவ்வொரு வெளிநாட்டு பயணமும் இந்தியாவின் நலனுக்கு பயனுள்ளதாக அமையும்" என்று அவர் கூறினார்.

# "தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாட வலியுறுத்தினேன், ஆனால்..." - அமைச்சர் ராஜ்மோகன்



சென்னை: மே 22-

"தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடும்படி இன்றும் நான் வலியுறுத்தினேன். ஆளுநர் மாளிகையில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் இப்படித்தான் நடைமுறை என சொல்லிவிட்டார்கள். அடுத்து தமிழக அரசு நடத்தும் நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து மட்டும்தான் முதலில் ஒலிக்கும்" என அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார். தமிழக முதல்வராக விஜய் பதவியேற்ற விழாவில், வந்தே மாதரம் முதலாவதாகவும், தேசிய கீதம் இரண்டாவதாகவும், தமிழ்த்தாய் வாழ்த்து மூன்றாவதாகவும் பாடப்பட்டது. இந்த விவகாரம் தமிழகத்தில் பெரும் சலசலப்பை உருவாக்கியது. அப்போது இதுபற்றி பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, இனிமேல் இதுபோல நடக்காது என்று விளக்கமளித்தார். இந்தச் சூழலில், இன்று 23 தமிழக அமைச்சர்கள் பதவியேற்ற விழாவிலும், அதேபோல மூன்றாவதாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது சலசலப்பை உருவாக்கியுள்ளது. இந்நிலையில், செய்தியாளர்களிடம் பேசிய பள்ளிக் கல்வி அமைச்சர் ராஜ்மோகன், "எந்த தலைமுறைக்கெல்லாம் கல்வி மறுக்கப்பட்டதோ, அவர்களெல்லாம் இன்று கல்வி வழங்கும் இடத்துக்கு உயர்ந்துள்ளனர்.

ஒரு ஜென்ஸீ தலைமுறை அரசியல் பழகியது, ஒரு ஜென்ஸீ தலைமுறை இன்றிலிருந்து அதிகாரம் பழகவுள்ளது. இதற்கு காரணம் முதல்வர் ஜோசப் விஜய். இந்த தலைமுறை மாற்றத்தில், அமைச்சரவையில் சமூக நீதி என்பது சரியாக பிரதிநிதித்துவப் படுத்தப்பட்டுள்ளது. பல பெண் அமைச்சர்கள், ஒடுக்கப்பட்டோரின் குரல் சட்டப்பேரவையிலும், அமைச்சரவையிலும் ஒலிக்கிறது. இன்று அமைச்சரவையில் பதவியேற்க காங்கிரஸ் தோழர்கள் வரும்போது பெரும் கரவொலி எழுந்தது. இது 60 70 ஆண்டுகளாக காத்திருந்த வலி. வெறும் கூட்டணி மட்டும் வைத்துக்கொண்டு, அதிகாரத்தை கொடுக்காமல் இருந்த காலம் போய்விட்டது. இளைஞர்கள் பலர் அமைச்சர்களாக வந்துள்ளனர், அவர்கள் விரைவாக பழகிக் கொள்வார்கள்.தமிழ்த்தாய் வாழ்த்தை முதலில் பாடும்படி இன்றும் நான் வலியுறுத்தினேன். ஆளுநர் மாளிகையில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் இப்படித்தான் நடைமுறை என சொல்லிவிட்டார்கள். அடுத்து தமிழக அரசு நடத்தும் நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து மட்டும்தான் முதலில் ஒலிக்கும். தமிழ்நாடு அரசு நடத்தும் நிகழ்ச்சிகளில் தமிழுக்கே முதலிடம்" என்று அமைச்சர் ராஜ் மோகன் தெரிவித்தார்.

# கோவில்களில் சிறப்புக் கட்டண தரிசனம் அரசு பதிலளிக்க உத்தரவு

சென்னை:மே,22-

கோவில்களில் சிறப்புக் கட்டண தரிசனம் முறையை ரத்து செய்யக் கோரிய வழக்கில் அரசு பதிலளிக்க உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கோவில்களில் சிறப்புக் கட்டண தரிசன முறையை ரத்து செய்ய அறநிலைத்துறைக்கு உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்து. விஸ்வ இந்து பரிஷத் நிர்வாகி தொடர்ந்த இந்த வழக்கை மே 29ம் தேதி ஒத்திவைத்துள்ளது சென்னை உயர்நீதிமன்றம்

# வார இறுதி நாட்களை முன்னிட்டு 1,680 சிறப்பு பேருந்துகள் இயக்கம்: போக்குவரத்து துறை தகவல்



சென்னை:மே,22-

வார இறுதி நாட்களை முன்னிட்டு சென்னையில் இருந்து 1,680 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என, போக்குவரத்து துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் மோகன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்து இதர இடங்களுக்கு கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன், கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு இன்று 290 பேருந்துகளும், நாளை 595 பேருந்துகளும், சனிக்கிழமை அன்று 650 பேருந்துகளும், சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 21ம் தேதி முதல் 23ம் தேதி வரை 120 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாதவரத்திலிருந்து 21ம் தேதி முதல் 23ம் தேதி வரை 25 பேருந்துகளும் மற்றும் பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அலுவலர்கள் நியமனம்இந்நிலையில், இந்த வார இறுதியில் இன்று 6,022 பயணிகளும், வெள்ளிக்கிழமை 10,791 பயணிகளும், சனிக்கிழமை 7,761 பயணிகளும் மற்றும் ஞாயிற்றுக்கிழமை அன்று 1,06,450 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இச்சிறப்பு பேருந்து இயக்கத்தை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# வன விலங்கு சரணாலயங்களில் திறந்தவெளி வாகனங்களில் சுற்றுலாப் பயணிகள் செல்ல கர்நாடக அரசு தடை!!



பெங்களூரு:மே,22-

யானைகள் மோதலில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பெண் உயிரிழந்த நிகழ்வை அடுத்து, வன விலங்கு சரணாலயங்களில் திறந்தவெளி வாகனங்களில் சுற்றுலாப் பயணிகள் செல்ல கர்நாடக அரசு தடை விதித்துள்ளது. திறந்தவெளி வாகனங்களில் உடையாத கண்ணாடிகள், இரும்பு கம்பிகள் பொருத்தப்பட வேண்டும் என்றும், அவசர காலங்களில் பயன்படும் வகையில் ஆம்புலன்ஸ் சேவை தயார் நிலையில் இருக்க வேண்டும் என்றும் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கர்நாடகாவில் புகழ்பெற்ற துபாரே யானைகள் முகாமிற்கு விடுமுறை நாட்களில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதும். கோடை விடுமுறை என்பதால் கர்நாடகம் மட்டுமின்றி தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்தும் சுற்றுலா பயணிகள் சென்று வருகின்றனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த துளசி என்பவர் சுற்றுலாவுக்காக துபாரே முகாமுக்கு சென்றிருந்தார். அப்போது ஆற்றங்கரையில் நின்று யானைகள் குளிப்பாட்டப்படுவதை பார்த்துக்கொண்டிருந்தார். அந்த நேரத்தில், வளர்ப்பு யானைகளான கஞ்சன் மற்றும் மார்த்தாண்டா என்ற 2 யானைகள் குளிப்பாட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது திடீரென ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டன. யானைப்பாகன்கள் கட்டுப்படுத்த முயன்றபோதும், கஞ்சன் யானை மார்த்தாண்டாவை வேகமாக மோதியது. இதில் நிலை தடுமாறிய மார்த்தாண்டா யானை கீழே விழுந்தது. அப்போது, அருகில் நின்றிருந்த துளசி யானையின் கீழ் சிக்கி பரிதாபமாக உயிரிழந்தார்




# ஏர் இந்தியா விமானம் பெங்களூரு விமான நிலையத்தில் தரை யிறங்கும்போது, வால்பகுதி தரையில் மோதியதால் பரபரப்பு

பெங்களூரு:மே,22-

டெல்லியிலிருந்து பெங்களூரு சென்ற ஏர் இந்தியா விமானம் பெங்களூரு விமான நிலையத்தில் தரை யிறங்கும்போது, வால்பகுதி தரையில் மோதியதால்(tail-strike) பரபரப்பு நிலவியது. விமானம் பாதுகாப்பாகத் தரையிறங்கியதாகவும், பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் அனைவரும் வழக்கமான முறையில் விமானத்திலிருந்து வெளியேறியதாகவும் ஏர் இந்தியா கூறியுள்ளது.விமானம் புறப்படும்போதோ அல்லது தரை யிறங்கும்போதோ, அதன் பின்பகுதி ஓடுபாதையுடன் உராய்வதே 'வால் உராய்வு' (tailstrike) ஆகும். இந்த வால் உராய்வைத் தொடர்ந்து, அனைத்து விமானங்களும் கட்டமைப்புச் சிக்கல்களுக்காக ஆய்வு செய்யப்படுகின்றன.வால் பகுதியில் விமானம் மோதிய சம்பவத்தைத் தொடர்ந்து, குறுகிய உடலமைப்பு கொண்ட ஏர்பஸ் ஏ321 ரக விமானமான ஏர் இந்தியா கிமி2651, ஆய்வுக்காகத் தரையிறக்கப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதன் காரணமாக, டெல்லிக்குத் திரும்பும் ஏர் இந்தியா விமானம் ரத்து செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பயணிகளை விரைவில் தங்கவைக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக டாடாவுக்குச் சொந்தமான விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

"ஏற்பட்ட சிரமத்திற்கு ஏர் இந்தியா நிறுவனம் வருத்தம் தெரிவித்துள்ளது. எங்கள் பயணிகள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பே எங்களது முதன்மையான முன்னுரிமையாக உள்ளது," என விமான நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்

# டெல்லியில் வாடகை கார், ஆட்டோக்கள் 3 நாட்கள் வேலைநிறுத்தம் பயணிகள் கடும் அவதி

டெல்லி:மே,22-

டெல்லியில் வாடகை கார்கள் மற்றும் ஆட்டோக்களின் 3 நாட்கள் வேலைநிறுத்தம் இன்று தொடங்கி இருக்கிறது. டெல்லியில் மே 21 (இன்று) முதல் மே 23 வரை நடைபெற்று வரும் இந்த 3 நாள் ஆட்டோ மற்றும் சிணீதீ ஓட்டுநர்களின் வேலைநிறுத்தத்திற்கு எரிபொருள் விலை உயர்வு, குறைந்த கட்டண நிர்ணயம் மற்றும் அரசின் சுற்றுச்சூழல் கொள்கைகள் முக்கிய காரணங்களாக உள்ளன. தொடர்ச்சியாக மூன்று நாட்கள் நடைபெறும் இந்த வேலைநிறுத்தத் போராட்டத்தில் சுமார் 68க்கும் மேற்பட்ட போக்குவரத்து சங்கங்கள் பங்கேற்றுள்ளன. குறிப்பாக டெல்லியில் கடந்த 15 ஆண்டுகளாக அதிகாரப்பூர்வ ஆட்டோ மற்றும் டாக்சி கட்டணங்கள் மாற்றி அமைக்கப்படவில்லை என்று போக்குவரத்து சங்கங்கள் கூறியுள்ளன. எனவே தற்போதைய பணவீக்கம், விலைவாசி உயர்வு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் மற்றும் காப்பீட்டுக் கட்டண உயர்வு உள்ளிட்டவற்றை கருத்தில் கொண்டு தற்போதைய சூழலுக்கு ஏற்ப பயண கட்டணங்களை உடனடியாக உயர்த்த வேண்டும் என வலியுறுத்தி உள்ளனர். டெல்லி மெட்ரோ மற்றும் அரசுப் பேருந்துகள் வழக்கம் போல் இயங்கினாலும், ஆப் அடிப்படையிலான கேப் சர்விஸ் மற்றும் ஆட்டோக்கள் கிடைக்காததால் டெல்லி, நொய்டா, குருகிராம் மற்றும் காசியாபாத் பகுதிகளில் வெளியூர்களில் இருந்து வரும் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர். ஒரு சில வாகனங்கள் இயக்கப்பட்டாலும் அதிலும் கட்டணங்கள் பல மடங்கு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது

# தொடர் மின்வெட்டு மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்ட மக்கள்

சென்னை:மே,22-

திருவொற்றியூர், எண்ணூர், புதுவண்ணாரப்பேட்டை, ராயபுரம் பகுதிகளில் இரவு நேரத்தில் தொடர் மின்வெட்டு என புகார் அளித்துள்ளனர். மின்வெட்டு தொடர்பாக மின்வாரிய ஊழியர்களை தொடர்பு கொண்டால் பேச மறுப்பதாக மக்கள் வேதனை தெரிவித்த நிலையில், இது தொடர்பாக மின்விநியோக பாதிப்பை சரிசெய்யக் கோரி மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்

# வானிலை முன்னறிவிப்பு: சென்னை, புறநகருக்கு வெப்ப அலை எச்சரிக்கை



சென்னை:மே 22-

தமிழகத்தில் சில மாவட்டங்களில் மே 27ம் தேதி வரை ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவும், சென்னையில் வெப்ப அலை வீசவும் வாய்ப்புள்ளது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: மத்திய வங்கக்கடல் பகுதிகளில் இருந்து தமிழகம் வரை தென்மேற்கு வங்கக்கடல் வழியாக சுமார் 3.1 கிமீ முதல் 4.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (மே 22) ஓரிரு இடங்களிலும், 23, 24 தேதிகளில் ஒருசில இடங்களிலும், 25 முதல் 27ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகத்தில் நாளை (மே 22) சேலம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களிலும். 23ம் தேதி திருவண்ணாமலை, திருச்சி, சேலம், நாமக்கல், வேலூர், திருப்பத்தூர் மற்றும் தருமபுரி மாவட்டங்களிலும், 24ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, வேலூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களிலும். 25ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் இடி, மின்னல், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். 26ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலும், 27ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும். உள் தமிழக பகுதிகளில் நாளை முதல் 24ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்கும். கடலோர தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 7 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் வெப்ப அலை வீசக்கூடும். மாலை அல்லது இரவு நேரங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 107 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்

தென் தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 24ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும். தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் 5 செமீ, சிவகங்கை மாவட்டம் காரைக்குடி, நாகுடி, கன்னியாகுமரி மாவட்டம் நெய்யூரில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது.



# ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் சாதனை

தென்காசி,மே,22-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 20252026ம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவ மாணவியர் தேர்வு எழுதினர். இத்தேர்வு முடிவில் பள்ளி மாணவிகள் மலர் தீபா 492/500, ஹன்சிகா 490/500 மதிப்பெண்களும், மாணவர்கள் சுந்தர்ராம் 490/500, ஹரிராம் 489/500 ஆகியோர் மதிப்பெண்களை பெற்று பள்ளியில் முதல் இடத்தை பிடித்துள்ளனர். மேலும், மாணவன் சுந்தர்ராம், கபினாஷ் மற்றும் தமிழரசி அறிவியல் பாடத்தில் 100க்கு 100 மதிப்பெண்களையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.பள்ளியில் முதல் இடம் பிடித்த மாணவ மாணவியர்களுக்கும், 450 க்கு மேல் 37 மாணவச் செல்வங்களும், 400க்கு மேல் 85 மாணவச் செல்வங்களுக்கும், வெற்றிக்கு உழைத்த ஆசிரிய, ஆசிரியர்கள், பெற்றோர்களுக்கும், பள்ளியின் முதல்வர் பழனிச்சாமி, பள்ளி செயலாளர் ராஜேஷ் கண்ணா ஆகியோர் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.



■ புதுச்சேரியில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நினைவு நாளையொட்டி அவரது சிலைக்கு அரசு சார்பில் துணைநிலை ஆளுநர் கைலாஷ்நாதன், சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜவேலு, ஆறுமுகம், சிவக்கொழுந்து, சாய் சரவணகுமார், அழகு, நாராயணசாமி, ரவிக்குமார், தலைமைச் செயலாளர் சரத் சவுகான், டி.ஐ.ஜி சத்தியசுந்தரம், முதுநிலை காவல் கண்காணிப்பாளர் கலைவாணன், ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



# 497 மற்றும் 496 மதிப்பெண்கள்! சாதித்த இளந்தளிர்களைக் கொண்டாடிய DYFI தோழர்கள் நேரில் பாராட்டு

அவிநாசி மே 22-

திருப்பூர் மாவட்டம் அவிநாசி நகராட்சிக்குட்பட்ட நடுவச்சேரி கருக்கங்காட்டு புதூர் பகுதியில், பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மிக உயர் மதிப்பெண்கள் பெற்றுப் சாதனை படைத்த மாணவிகளை இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) சார்பாக நேரில் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.*மாணவிகளின் அசுர சாதனை:*அவிநாசி நடுவச்சேரி கருக்கங்காட்டு புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயின்று பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் 500க்கு 497 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பிடித்த சாதனை மாணவி அனு ஸ்ரீ, அதே பகுதியைச் சேர்ந்த தனியார் பள்ளியில் பயின்று 496 மதிப்பெண்கள் பெற்ற சாதனை மாணவி கனிஷ்கா அவர்களையும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களையும் வாலிபர் சங்கத் தோழர்கள் நேரில் சந்தித்தனர். * பொன்னாடை அணிவித்துக் கொண்டாட்டம்:*சாதனை படைத்த மாணவிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI) மற்றும் வர்க்க வெகுஜன அமைப்புகள் சார்பில் பொன்னாடை அணிவித்து, இனிப்புகள் வழங்கி தங்களது நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டனர்.*பங்கேற்ற தோழர்கள்:*இந்நிகழ்வில் DYFI ஒன்றியத் தலைவர் சந்தோஷ் குமார், ஒன்றியச் செயலாளர் வடிவேல், ஒன்றியப் பொருளாளர் தங்கராஜ், DYFI முன்னாள் ஒன்றியச் செயலாளர் ஆர். பழனிச்சாமி, அவிநாசி பொதுத் தொழிலாளர் சங்கத் தலைவர் ஏ. ஈஸ்வரமூர்த்தி, மாதர் சங்க ஒன்றியச் செயலாளர் கௌரி மணி மற்றும் நடுவச்சேரி கிளை முன்னாள் செயலாளர் ராஜேஷ் உள்ளிட்ட தோழர்கள் பலர் திரளாகக் கலந்துகொண்டு மாணவிகளை வாழ்த்தினர்.



■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித், மண்டலம்3, வார்டு35க்குட்பட்ட ஊத்துக்குளி சாலையில் உள்ள வீடுகளில் பொதுமக்கள் மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம் பிரித்துத் தூய்மைப் பணியாளர்களிடம் வழங்குவதை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, சுகாதார அலுவலர் ராமகிருஷ்ணன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# சீமானைச் சுட்டுக் கொன்றிருப்பேன்! இலங்கை எம்.பி பேச்சால் கொந்தளிக்கும் அகரக்கட்டு லூர்து நாடார்

சென்னை,மே 22-

"நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செந்தமிழன் சீமான் அவர்களைத் தமிழ்நாட்டில் வைத்துச் சுட்டுக்கொன்றிருப்பேன்" என்று இலங்கை நாடாளுமன்றத்தில் பேசியுள்ள அந்நாட்டு எம்.பி அர்ஜுனா இராமநாதனுக்கு, தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பு கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.*அகரகட்டு லூர்து நாடார் விடுத்துள்ள



அதிரடி அறிக்கை விபரம்:*கடந்த மே 18 அன்று தமிழகம் வந்திருந்த இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுனா இராமநாதன், இங்கு அமைச்சர் ஆதவா அர்ஜுன் மற்றும் வி.சி.க தலைவர் தொல்.திருமாவளவன் ஆகியோரைச் சந்தித்துவிட்டுத் திரும்பியுள்ளார். இலங்கை நாடாளுமன்றத்திற்குச் சென்ற அவர், "நான் தமிழ்நாட்டிற்குச் சென்றபோது ஆயுதம் கொண்டு செல்லாததால் சீமானைச் சுட்டுக்கொல்லாமல் வந்துவிட்டேன்" என ஆவேசமாகப் பேசியுள்ளார்.தமிழக மக்களின் ஒற்றுமையைக் குலைக்கவும், அமைதியைக் கெடுக்கவும் இலங்கை அரசின் திட்டமிட்ட ஒற்றனாக இவர் தமிழகம் வந்தாரா? என்ற பலத்த சந்தேகம் எழுகிறது.*பிரதமர் மோடி, முதல்வர் விஜய் கண்டிக்க கோரிக்கை:*உலகத் தமிழர்களின் தலைவனாக விளங்கும் ஒரு இந்தியக் குடிமகனை, அந்நிய நாட்டுப் பிரதிநிதி ஒருவர் இந்திய மண்ணிற்குள் புகுந்து கொன்றிருப்பேன் என்று கூறுவது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி, தமிழக முதல்வர் ஜோசப் விஜய் மற்றும் ஒவ்வொரு இந்தியனையும் அவமானப்படுத்தியதற்குச் சமம்.எனவே, இந்த இழிசெயலுக்காக இலங்கை அதிபரும், சம்பந்தப்பட்ட எம்.பியும் இந்தியாவிடமும், தமிழர்களிடமும் பகிரங்கமாக வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனத் தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் தனது கண்டன அறிக்கையில் திட்டவட்டமாக வலியுறுத்தியுள்ளார்.

# தவெக அமைச்சர் அவிநாசி கமலிக்கு நல்லாறு பாதுகாப்பு இயக்கம் வாழ்த்து!

அவிநாசி மே 22-

அவிநாசி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தற்போது தமிழக வெற்றிக் கழக (த.வெ.க) அரசில் அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள கமலி அவர்களுக்கு, நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் தங்களது நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டுள்ளனர்.* தேர்தல் வாக்குறுதியை நினைவூட்டிய நிர்வாகிகள்:* இதுகுறித்து நல்லாறு பாதுகாப்பு இயக்க நிர்வாகிகள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:அவிநாசி தொகுதிக்கு மிகவும் அவசியமாகவும் அவசரமாகவும் செய்ய வேண்டிய குடிநீர் தேவைக்கு நல்லாற்றைப் பேணிக் காப்பது மிக முக்கியமான தருணமாகும். எமது இயக்க நிர்வாகிகள்



அனைவரும் தேர்தலுக்கு முன்பாகவே தங்களை நேரில் சந்தித்து இதுகுறித்துப் பேசினோம். அதற்கு நீங்கள், கண்டிப்பாக நல்லாற்றின் பிரச்சினைகளைச் சரிசெய்து, தூர்வார உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்திருந்தீர்கள் என்பதை இந்த மகிழ்ச்சியான தருணத்தில் நினைவூட்டுகிறோம்.*வாழ்த்துகளைத் தெரிவித்த நிர்வாகிகள் பட்டியல்:*அமைச்சராகத் தங்களின் பணி மென்மேலும் சிறக்க நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில், தலைவர் கோவிந்தராஜ், செயலாளர் அருணாச்சலம், பொருளாளர் ஜேம்ஸ் கென்னடி, துணைத் தலைவர்கள் ஆர். பாலசுப்பிரமணியம், சசிகுமார், பால்பாண்டியன்,இணைச் செயலாளர்கள் பி. சுப்பிரமணியம், சக்கரபாணி, செந்தில் குமார், செயற்குழு உறுப்பினர்கள் நடராஜ், வெங்கடாசலம், காமராஜ், சுப்பிரமணியம், ராமசாமி, சரவணன்.ஆகியோர் தங்களது வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.



# திசையன்விளையில் ராஜீவ் காந்தியின் 35வது நினைவு தினம்! காமராஜர் சிலை அருகில் காங்கிரஸ் கமிட்டி அஞ்சலி

திசையன்விளை மே 22-

நெல்லை மாவட்டம் திசையன்விளையில், இந்தியத் திருநாட்டின் முன்னாள் பாரத பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களின் 35ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, காங்கிரஸ் கட்சி சார்பில் மாபெரும் நினைவஞ்சலி மற்றும் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது.*மாலை அணிவிப்பு மற்றும் துண்டுப் பிரசுரம் விநியோகம்:*

திசையன்விளை காமராஜர் சிலை அருகில் நடைபெற்ற இந்த நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு, திசையன்விளை நகர காங்கிரஸ் தலைவர் ஏவி ஜே அல்பர்ட் தலைமை தாங்கினார். ராதாபுரம் தொகுதி காங்கிரஸ் பொறுப்பாளர் விவேக் முருகன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, ராஜீவ் காந்தியின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி நெஞ்சார்ந்த மரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து, பொதுமக்களுக்கு "ராஜீவ் காந்தியின் சாதனைகள் பத்து" என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு, பயங்கரவாத எதிர்ப்பு உறுதிமொழியும் ஏற்கப்பட்டது.*பங்கேற்ற நிர்வாகிகள்:*இம்மாபெரும் நினைவஞ்சலி கூட்டத்தில், நெல்லை மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் விஜய பெருமாள், மாவட்டச் செயலாளர் கவிஞர் மருதூர் மணிமாறன், இணைச் செயலாளர் ஐசக், வட்டாரத் தலைவர் அந்தோணி ராஜ், முன்னாள் கவுன்சிலர் பொன்ராஜ், நகரச் செயலாளர் சங்கர், முக்கிய நிர்வாகிகள் குட்டம் சிவாஜி முத்துக்குமார், ஆரஞ்சு முருகேசன், தேவதாஸ் வில்சன், ஸ்டீபன் லால், சைமன் உட்பட காங்கிரஸ் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் கே.ஜே.பிரவீன் குமார், மேலூர் வட்டம், பள்ளப்பட்டி கிராம பாலாற்றின் குறுக்கே ஒருங்கிணைந்த நீர்வள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 7.70 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள தடுப்பணை பணிகளை ஆய்வு செய்து பார்வையிட்டார்.

# தவெகவினரின் உலகம் வேறு; நம் உலகம் வேறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு

விருதுநகர்:மே,22-

இன்ஸ்டாகிராம் போன்ற சோஷியல் மீடியாக்கள் மூலம் மக்களை, இளைஞர்களை மதிமயக்கி தவெக வாக்குகளை பெற்றிருப்பதாக முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கூறி இருக்கிறார். விருதுநகரில் நடைபெற்ற திமுக நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், தவெகே ஆட்சி ஒரு மாயையினால் உருவாக்கப்பட்டது என்றும், அதை எப்படி சுமூகமாக நடத்துவது என்று தெரியாமல் திக்குமுக்காடி வருவதாகவும் குறிப்பிட்டார்.



நடந்து முடிந்த தேர்தலில் திமுகவின் தோல்வி நிச்சயம் நமக்கு ஒரு படிப்பினை தான் என்றும், மீண்டும் ஸ்டாலின் முதல்வராவார் என்றும் தங்கம் தென்னரசு பேசினார். ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும், தவெகவினர் மாய உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறர்கள்.

அவர்கள் உலகம் வேறு, நம் உலகம் வேறு டிஜிட்டல் உலகத்தில் பொய்யை திரும்ப திரும்ப சொல்வதால் உண்மையாகும் என நினைக்கின்றனர் என்று விமர்சித்தார். தமிழக வெற்றிக் கழகத்தின் செயல்பாடுகள் மற்றும் அவர்களின் அரசியல் புரிதல் எதார்த்தத்திற்குப் புறம்பாக, ஒரு கற்பனையான உலகத்தில் இருப்பது போல் உள்ளதாகவும் விமர்சித்துள்ளார். அடிக்க அடிக்க எழும்பும் பந்தை போல தான் திமுக எழும்பும் என்றார்



■ அஇஅதிமுக. கழக பொது செயலாளர் எடப்பாடியார் ஆ னைக்கிணங்க, திருப்பூர் புற நகர் மாவட்ட கழக செயலாளர் திருப்பூர் EX.MP. சிவசாமி அவர்களை, உடுமலை நகர கழக அவைத்தலைவர் சாமி (என்ற ) சிவராஜ் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்து கழக அடுத்த கட்ட பணிகள் குறித்து விளக்கம் அளித்தார்.



■ ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் ஈஞ்சம்பள்ளி கிராமம் கீரமடையில் எழுந்தருளியுள்ள, ஸ்ரீ பொருள் தந்த குல ஸ்ரீ வேலாத்தாள் சாமிக்கு பொங்கல் பண்டிகை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் தீர்த்த குடம் எடுத்து வந்து சிறப்பு அபிஷேகமும், மறுநாள் பொங்கல் மற்றும் மாவிளக்கு விசேஷ அபிஷேக பூஜைகளும் அலங்கார ஆராதனை, மாலை வள்ளி கும்மியாட்டம் சிறப்பாக நடைபெற்றது..




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000